(இ) ஆம் எனில், அவை மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : (அ) ஆம்.

(இ) இக் கோரிக்கைகள் கவனமாக ஆலோசித்துப் பார்த்த பின்னர் நிராகரிக்கப்பட்டன.

திரு. செ. மாதவன் : கோர்ட் பிராஸஸ் சர்வர்களிடமிருந்து நீண்ட நாட்களாக இந்த கோரிக்கை வந்து கொண்டிருக்கிறது. அவர்கள் மீது இருக்கிற லஞ்சப் புகார்களைக் குறைப்பதற்கு இந்தக் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்வது அவசியமில்லையா ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : கனம் அங்கத்தினர் சொல்லக்கூடிய லஞ்சப் புகார்கள் சம்பந்தமாக என்னிடத்தில் தகவல் இல்லை.

பர்மாவிலிருந்தும் இலங்கையிலிருந்தும் தாயகம் திரும்புவர்களுக்கு தேயிலைத் தோட்ட வேலை

* 149 கேள்வி—திரு. கரு. சீமைச்சாமி: கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பர்மாவிலிருந்தும், இலங்கையிலிருந்தும் திரும்பும் தமிழர்களுக்கு தேயிலைத் தோட்டம் போட்டுக் கொடுக்கும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : (அ) & (இ) தேயிலை, காப்பி, ரப்பர் போன்ற சில மலைத்தோட்டப் பயிர்களுக்கு காடுகளிலும், காடுகளுக்கு புறம்பாக உள்ள பகுதிகளிலும் ஏற்ற இடங்கள் உள்ளனவா என்று ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. போதுமான பரப்பளவு நிலங்கள் இருக்குமேயானுல் 4-வது திட்டக் காலத்தில் தேயிலை, காப்பி வேறு சில மலைத்தோட்டப் பயிர்களைச் சாகுபடி செய்வதன் மூலம் பர்மா, இலங்கை அகதிகளுக்கு வேலை வசதி தரும் திட்டம் ஒன்று வகுக்க முடியும். இதற்காக ஒரு வன உதவிப் பாதுகாவலரையும், தேவையான துணை அலுவலர்களையும் கொண்ட ஆய்வுக்குழு ஒன்று 1—4—1965-ல் இருந்து நியமிக்கப்பட்டுள்ளது.

திரு. கரு. சீமைச்சாமி : கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தேயிலை, காப்பி, வேறு சில மலைத்தோட்டப் பயிர்களைச் சாகுபடி செய்யத் தோட்டம் அமைக்கப்படும் என்ருர்கள். பர்மா, இலங்கை இந் நாடுகளில் இருந்து வருகிற தமிழர்களுக்கு உடனடியாக வாழ் வளிக்க இந்தத் தோட்டங்கள் அமைக்கப்படுமா ? நான்காவது திட்டத்தில் அமைக்கப்படும் என்ருல் அதுவரை அவர்கள் எப்படி வாழ்வார்கள் ?

9th August 1965]

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : தேயிலை, காப்பி பயிரிடக்கூடிய இடங்கள் எங்கே இருக்கின்றன என்று பார்த்துத்தான் முடிவு செய்ய முடியும்.

நீதித்துறையில் லஞ்சக் குற்றச்சாட்டுகளை விசாரிக்கத் தனி நிறுவனம்

* 150 **கேள்வி.—திரு. செ. மாதவன் :** கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நீதித்துறையில் லஞ்சக் குற்றச்சாட்டுகளை விசாரிக்க தனி நிறுவனம் அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கின்றதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIYAR : (a) & (b) A special officer in the rank of District Magistrate is in-charge of Vigilance Cell constituted in the High Court. He is assisted by specially selected Police personnel with experience in Vigilance and Anti-Corruption.

திரு. செ. மாதவன் : இந்த விஜிலன்ஸ் செல்லை திறப்பதற்கு முன்னுல் உயர்நீதி மன்றத்திடம் இந்த அரசாங்கம் ஏதேனும் கருத்துத் தெரிவித்ததா ? இந்தத் துறையை ஏற்படுத்துவதற்கு அவர்கள் தங்கள் சம்மதத்தைத் தெரிவித்திருக்கிருர்கள் ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : இந்த மாதிரி விஷயங்களில் உயர்நீதி மன்ற யோசனை கேட்கப்பட்டுத் தான் காரியங்கள் செய்யப்படும்.

சேலம் சப்-ஜெயில் கைதியின் தற்கொலை

* 151 **கேள்வி.—திரு. எம். எஸ். மணி :** கனம் செய்தி விளம்பரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1965-ம் ஆண்டு மார்ச் திங்களில் சேலம் சப்-ஜெயிலில் யாரேனும் கைதி தூக்குப் போட்டுக் கொண்டு இறந்து விட்டது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதற்கான காரணம் யாது ?

கனம் திரு. கோ. பூவராகன் : (அ) ஆம்.

(இ) சிறையிலிருந்த கைதி எக்காரணத்திற்காகத் தற்கொலை செய்துகொண்டார் எனக் குறிப்பிட வெளிப்படையான சான்று எதுவும் இல்லை.

திரு. செ. மாதவன் : என் இறந்தார் என்பதை எப்படிப் பரிசீலித்தார்கள் ? டாக்டர் அறுவைச் சிகிச்சை செய்திருப்பாரே, அதில் கண்ட உண்மை என்ன ?